# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா
# கற்கைநெறியின் மட்டம் III
# இலக்கிய ஆய்வு சார்ந்த ஆய்வறிக்கையை வடிவமைப்பது தொடர்பான வழிகாட்டி

கலாநிதி ஆர் எச் ஐ எஸ் ரணசிங்க
சிரேஷ்ட உதவி நூலகர்
களனிப் பல்கலைக்கழகம், களனி

தமிழாக்கம்

எம் எஸ் எம் ஷிஹாம்
இலங்கைத் தேசிய நூலகம்

இலங்கை நூலகச் சங்கம்
2024

இலங்கை நூலகச் சங்கம்
275/75, தொழில்வாண்மையினர் சங்க மத்திய நிலையம்,
ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை,
கொழும்பு 07

© இலங்கை நூலகச் சங்கம் - 2024

# முன்னுரை

இக்கைநூலானது இலங்கை நூலகச் சங்கத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கை நெறியின் மட்டம் III இல் கற்கின்ற மாணவர்களின் கற்கைத் தேவையாகக் காணப்படுகின்ற இலக்கிய ஆய்வு தொடர்பான வழிகாட்டலாகக் காணப்படுகிறது.

கட்டுரைக்காக தலைப்பொன்றைத் தெறிவு செய்தல், முறையாக தகவல்களை ஒழுங்கமைத்துக் கொள்ளுதல், முன்வைத்தல், உசாவுப் பட்டியலைத் தயார்செய்கின்ற விதம் போன்றன தொடர்பான அடிப்படைத் தகவல்கள் இதில் உள்ளடங்குகின்றன.

இக் கைநூலை வடிவமைத்துக் கொள்வதற்காக என்னை தைரியப்படத்தியதுடன் ஆலோசனைகளை வழங்கிய முன்னால் தலைவர் திருமதி தயா ரத்நாயக்க அவர்கள் மற்றும் இந்நாள் தலைவர் திரு என் யூ யாப்பா, தட்டச்சு செய்து தந்த செல்வி கௌசாலி மொரவக்க, திரு டிபிள்யு ஏ சரத் குமார மற்றும் செல்வி பீ உதித்தா கல்யாணி என்போருக்கு எனது நன்றியைத் தெறிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி ஆர் எச் ஐ எஸ் ரணசிங்க,
இலங்கை நூலகச் சங்கம்.

2002 ஜூன் 20.

# மொழிபெயர்ப்பாளர் உரை

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கைநெறியின் மட்டம் III பரீட்சைக்காக இலக்கிய ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாய்வைப் பூர்த்தி செய்பவரே இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவராகக் கணிக்கப்படுவர். குறித்த காலத்தில் இவ்வாய்வறிக்கையானது ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளதால், அது தொடர்பான முறையான தெளிவைப் பெற வேண்டிய தேவை காணப்படுகிறது. இது தொடர்பான வழிகாட்டியானது தமிழ் மொழி மூலமாகக் காணப்படாததால், மாணவர்கள் அதிகம் அசௌகரியங்களைச் சந்திப்பதை நான் உணர்ந்திருக்கிறேன். எனவே தான் இதனைத் தமிழில் மொழிபெயர்க்க உத்தேசித்தேன்.

இக்கைநூலானது நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கைநெறியின் மட்டம் III பரீட்சைக்கான இலக்கிய ஆய்வு தொடர்பான ஆய்வறிக்கையைத் தயாரித்தலுக்கான வழிகாட்டலை வழங்குகிறது. இதனை என்னால் இயன்ற வரை கருத்துக்கள் பிசகாமலும் இலகு நடையிலும் தமிழாக்கம் செய்துள்ளேன்.

இதனை மொழிபெயர்ப்பதற்கான அனுமதியை வழங்கிய இலங்கை நூலகச் சங்கத்திற்கும், கலாநிதி ஆர் எச் ஐ எஸ் ரணசிங்க அவர்களுக்கும், இதன் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அறிமுக உரை ஒன்றையும் வழங்கிய கொழும்பு சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி தயானந்தி சிறீதரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதனை வடிவமைத்துக் கொள்ள பல வகையிலும் உதவி செய்தவர்களுக்கும் இம்முயற்சியை வெற்றிகரமானதாக்கிக் கொள்ள உதவிய இறைவனுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

எம் எஸ் எம் ஷிஹாம்,
இலங்கைத் தேசிய நூலகம்.

# அறிமுக உரை

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற நூலக தகவல் விஞ்ஞான டிப்புளோமா கற்கை நெறியின் மட்டம் III இனை நிறைவு செய்வதற்கு அதன் ஒரு பகுதித்தேவையாக மாணவர்கள் ஒரு ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்பட்டு வருகின்ற இக்கற்கை நெறியில் தமிழ் மொழியிலான நூல்கள் மற்றும் தகவல் வளங்கள் மிகக்குறைவாகவே உள்ளன. அதிலும் இறுதியாக மேற்கொள்ளப்படும் ஆய்வுக்கட்டுரைக்குத் தலைப்பைத் தெரிவு செய்வதிலிருந்து அதை சமர்ப்பிக்கும் வரை வழிகாட்டிகள் எதுவுமின்றித் தமிழ் மாணவர்கள் படும் இன்னல்கள் நாம் நேரடியாக கண்டறிந்த உண்மையாகும்.

நூலக தகவல் விஞ்ஞான மாணவர்களின் தேவை கருதி கலாநிதி ஆர்.எச்.ஐ.எஸ். ரணசிங்க அவர்களினால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட "இலக்கிய ஆய்வு சார்ந்த ஆய்வறிக்கையை வடிவமைப்பது தொடர்பான வழிகாட்டி" ஆய்வறிக்கை தொடர்பான சகல விடயங்களையும் மாணவர்களுக்குத் தெளிவாக உதாரணங்களுடன் விளக்குகிறது. இதில் கூறப்பட்டுள்ள சகல விடயங்களும் தமிழ் மாணவர்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் திரு. எம்.எஸ்.எம். ஷிஹாம் அவர்களினால் எடுத்துக்கொள்ளப்பட்ட இம் மொழிபெயர்ப்பு முயற்சி மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதுவரை காலமும் ஆய்வறிக்கையைத் தயாரிப்பது தொடர்பாக தமிழ் மாணவர்களிடையே காணப்பட்ட சந்தேகங்கள் நீங்கி தெளிவான முறையில் சிறந்த கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கு இவ்வாக்கம் மிகவும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

திருமதி தயானந்தி சிறீதரன்
சிரேஷ்ட உதவி நூலகர்
கொழும்பு பல்கலைக்கழகம்.

# உள்ளடக்கம்


முன்னுரை ........ i

மொழிபெயர்ப்பாளர் உரை ........ ii

அறிமுக உரை ........ iii

உள்ளடக்கம் ........ iv

1. தேவைப்பாடு ........ 1

2 ஆய்வுக்கட்டுரைக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் ........ 1

3. தயாரிப்புக்கான காலவரையறை ........ 1

4 விடயத் தலைப்பினைத் தெரிவு செய்தல் ........ 2

5. கட்டுரைத் தலைப்புகள் ........ 2

6. ஆய்வுக் கட்டுரையை வரையும் போது கவனத்தில் எடுக்க வேண்டியவைகள் ........ 3

7. கட்டுரைத் தலைப்புக்கள் தொடர்பான சுருக்க அறிமுகம் ........ 5

8. பொதுவான அறிவுறுத்தல்கள் ........ 9

9. மதிப்பீடு செய்தல் ........ 11

10. பின்னிணைப்புகள் ........ 12

## 1. தேவைப்பாடு

இலங்கை நூலகச் சங்கத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கைநெறியின் மட்டம் III அல்லது இறுதிப் பரீட்சைக்காக ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இக்கற்கை நெறியினைப் பூரணப்படுத்துவதற்காக கற்கைநெறியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற எழுத்துப்பரீட்சையைப் போன்றே இலக்கிய ஆய்விலும் சித்தியெய்த வேண்டியுள்ளது.

முறையான இலக்கிய ஆய்வொன்றிற்கான பிரவேசத்தை ஏற்படுத்தவதற்கான ஒரு வழிகாட்டலை இவ்வாய்வானது வழங்குகின்றது.

மாணவர்கள் தமது விருப்பப்படி ஒரு தலைப்பினை இதற்காக தெரிவு செய்து கொள்ளலாம். இதன்படி தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்குட்பட்டதாக ஆறு (06) கட்டுரைகள் வரையப்பட வேண்டும். குறித்த தலைப்புத் தொடர்பான பூரண அறிவினை மாணவர்கள் பெற்றுக் கொள்வது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாய்வுக்கட்டுரையானது குறித்த ஒரு விடயத்துடன் தொடர்பான தகவல் வழிகாட்டியாக இருக்க வேண்டும். உதாரணமாக 'வனவியல் " என்ற தலைப்பில் மாணவரொருவர் கட்டுரை வரைவாராயின், அக்கட்டுரையானது குறித்த தலைப்பை ஆய்வு செய்கின்ற ஒரு வாசகருக்கு அத்துறை தொடர்பான தகவல்களைக் தேடிக்கொள்வதற்கு ஏதுவான தகவல்களை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். வனவியல் தொடர்பான பிரதான தகவல் மூலங்கள் இதில் உள்ளடக்கப்படவேண்டியதுடன், அது தொடர்பான விமர்சன ரீதியான கருத்துகள் முன்வைக்கப்படல் வேண்டும்.

## 2 ஆய்வுக்கட்டுரைக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

கற்கை நெறியின் ஆரம்பத்திலே மாணவர்கள் ஆய்வின் தலைப்பொன்றிற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் இரு பிரதிகளைப் பூர்த்தி செய்து அதனை உங்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மேற்பார்வையாளரின் ஒப்பத்துடன் கல்வி அதிகாரியின் அனுமதிக்காக அனுப்பப்படவேண்டும். ஒரே கல்வியாண்டில் கற்கின்றவர்கள் வெவ்வேறு தலைப்பினைத் தெரிவு செய்வது அவசியமானதாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரே தலைப்புக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 3. தயாரிப்புக்கான காலவரையறை

இவ்வாய்வுக் கட்டுரையானது எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் பூர்த்தி செய்து ஒப்படைக்கப்படல் வேண்டும். கற்கைநெறி ஆரம்பித்தது முதலே தேவையான தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொள்வது உசிதமானதாகும். அவ்வாறு செய்வதானது கட்டுரை தொடர்பாக எழுகின்ற சிக்கல்களைக் குறித்த ஆசிரியருடன் கலந்தாலோசித்துத் தீர்த்துக் கொள்ள ஏதுவாக அமையும்.

பாடநெறியுடன் தொடர்பான மேலதிகத் தேடல்களுக்காக நூலகங்களுக்குச் செல்லும் போது உமது ஆய்வுக் கட்டுரை தொடர்பான தகவல்களைச் சேகரித்துக்கொள்ள முடியுமாக இருக்கும். இதன் மூலம் உமது எழுத்துப் பரீட்சை முடிந்தவுடன் ஏற்கனவே உம்மால் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஒன்றிணைத்து நூலாக வடிவமைத்து ஒப்படைப்பது இலகுவானதாகக் காணப்படும்.

ஆய்வுக் கட்டுரையை உரிய காலத்தில் ஒப்படைப்பதற்காகச் சரியான திட்டமொன்றை வகுத்துக்கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யவேண்டிய கால வரையரையைக் கீழ்வரும் நடவடிக்கைககளை உள்ளடக்கியதாக திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

- தலைப்பை இணங்காணுதல்

- தகவல்களைச் சேகரித்தல்
- தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்
- முதலாவது மாதிரிப் பிரதியை தயாரித்தல்
- முதலாவது மாதிரிப் பிரதியை செ
- இறுதிப் பிரதியைத் தயாரித்தல்

## 4 விடயத் தலைப்பினைத் தெரிவு செய்தல்

விடயத்தலைப்பினைத் தெரிவு செய்வது அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியமாகும். தற்காலத்திற்குப் பொருத்தமான அல்லது அதிக ஆய்வுக்குட்படுத்தக்கூடிய விடயமொன்றைத் தெரிவு செய்து கொள்வது முக்கியமானது. மிகவும் ஆழமான விடயமொன்றைத் தெரிவு செய்யாது இருத்தல் வேண்டும். உதாரணமாக தூயி தசாம்ச பகுப்பாக்கத்தின் பிரதான பிரிவுகளைக் குறிப்பிடலாம். ஆழமான ஒரு தலைப்பைத் தெரிவுசெய்வதன் மூலம் உமது ஆய்வுக் கட்டுரையுடன் தொடர்பான சகல தகவல்களையும் உள்ளடக்குவது அசாத்தியமானதாகையால் உமது ஆய்வானது பூரணத்துவம் பெறாமல் போய்விடும். அதனால் உமது பெறுமதிமிக்க காலம் வீணாக இடமுண்டு.

உம்மால் முன்வைக்கப்படுகின்ற தகவல்கள் அத்துறை சார்ந்த ஆய்வாளர்கள், விடயத்தினைக் கற்பவர்கள், மற்றும் விடயம் தொடர்பான ஆர்வம் உள்ளவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

உமது விடயத் தலைப்புத் தொடர்பான பூரண தெளிவு இருத்தல் முக்கியமானது. விடயம் தொடர்பான உள்ளடக்கங்கள், உட்பிரிவுகள் என்பன தொடர்பான தெளிவின்றி ஆய்வு செய்வது கடினமானதாகக் காணப்படலாம்.

தலைப்பு தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அத்தலைப்புத் தொடர்பான தகவல் பெறுகின்ற மார்க்கங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நூலகத் தேடல்களுக்குப் புறம்பாக அத்துறை சார் புத்திஜீவிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

கட்டுரையின் இறுதியில் உம்மால் பயன்படுத்தப்பட்ட உசாத்துணை நூற்பட்டியல்கள், நூலகங்கள், தகவல் நிலையங்கள், தகவல்களைப் பெற்றுக் கொண்ட புத்தி ஜீவிகள் மற்றும் இணையதள முகவரிகள் தொடர்பான பட்டியலொன்று உள்ளடக்கப்படல் வேண்டும்.

## 5. கட்டுரைத் தலைப்புகள்

கீழ்வரும் அமைப்பில் 15 கட்டுரைத் தலைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

i. விடயத் தலைப்பு தொடர்பான அறிமுகம்: நோக்கம், வளர்ச்சிப் போக்கு, முக்கியத்துவம், வரைவிலக்கணம் (Introduction to the Subject )

ii. நூல்விவரப்பட்டியல்கள் (Bibliographies)

iii. பருவ வெளியீடுகள் (Periodicals)

iv. அகராதிகள், கலைச்சொல்லகராதிகள், கலைக்களஞ்சியங்கள் (Dictionaries, Glossaries, Encyclopedias)

v. விவரக் கொத்துக்கள், ஆண்டு நூல்கள் (Directories, Year Books)

vi. அமைப்புக்கள்: ஆய்வு மற்றும் அபிவிருத்தி, தொழில்சார் அமைப்புக்களும் நிறுவனங்களும் (Organizations: Research and Development, Professional Organizations and Institutions)

vii. சரிதைத் தகவல் மூலங்கள் (Biographical Information Resources)

viii. பூகோளத்தகவல் உசாவு மூலங்கள், பூகோளத்தகவல் பட்டியல்கள், பூகோளவரைபடங்கள், பூகோள வரைபட நூல்கள் (Geographical Reference Sources : Geographical Information Lists, Maps, Atlases)

xi. இலக்கிய மீளாய்வுகள் (Literature Reviews)

x. தேசிய மற்றும் சர்வதேச தகவல் முறைமைகள் மற்றும் வலையமைப்புக்கள் (Information Systems and Networks - National and International)

xi. நூலக மற்றும் தகவல் மத்திய நிலையங்கள் (Library and Information Centres)

xii. சுட்டியாக்கமும், சுருக்கக் குறிப்புப் பருவ இதழ்களும் (Indexing and Abstracting periodicals)

xiii. விடயத்துடன் தொடர்பான விசேட பகுப்பாக்க முறைகள் (Special Classification Schemes)

xiv. விடயத்துடன் தொடர்பான பட்டியலாக்கப் பிரச்சினைகள் (Cataloguing Problems regarding to subject)

xv. தரவுத்தளங்கள் (Bibliographic Databases)

மேலே குறிப்பிடப்பட்ட தலைப்புக்களுள் முதலாவது கட்டுரை உள்ளிட்ட ஆறு கட்டுரைகள் வரையப்படல் வேண்டும். முதலாவது கட்டுரை கட்டாயமானதாகும். நீங்கள் தெரிவு செய்த தலைப்புத் தொடர்பான அறிமுகம், நோக்கம், அதன் வளர்ச்சிப் போக்கு, முக்கியத்துவம் மற்றும் விடயம் தொடர்பான வரைவிலக்கணம் என்பன இப்பகுதியில் உள்ளடக்கப்படுவதால் உமது ஆய்வின் பயனுள்ள விளைவை இப்பகுதி மூலமே இனங்காணக் கூடியதாகவிருக்கம். நீங்கள் தெரிவு செய்கின்ற ஏனைய கட்டுரைகள் ஐந்தும் உமது தலைப்பைப் பிரதிபலிப்பனவாக இருத்தல் வேண்டும். உதாராணமாக, பருவ வெளியீடு என்ற தலைப்பைத் தெரிவு செய்வதாயின், குறித்த தலைப்புடன் தொடர்பான பருவ வெளியீடுகள் பற்றி மாத்திரமே எழுத வேண்டும். அதுவன்றி பருவ இதழ்கள் தொடர்பான பொதுவான அறிமுகம் அல்லது விளக்கம் தேவையற்றது.

உம்மால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைப்பைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய தகவல் காணப்படாதவிடத்து, II தொடக்கம் XV வரையுள்ள தலைப்புக்களில் இன்னுமொரு தலைப்பைத் தெரிவு செய்து இரண்டையும் சேர்த்து ஒரு முழுக் கட்டுரையாக எழுதிக்கொள்ளலாம். உதாரணமாக நீங்கள் தெரிவுசெய்த தலைப்பான தகவல் முறைமைகள் மற்றும் வலையமைப்புக்கள் என்ற தலைப்பின் கீழ் ஒரு கட்டுரையை வரைவதற்குப் போதிய தகவல்கள் காணப்படவில்லையாயின் நூலக தகவல் மத்திய நிலையங்கள் என்ற தலைப்பையும் கட்டுரையில் இணைத்துக் கொள்ளலாம். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டதைக் கட்டுரையின் தலைப்புப் பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இவ்வாறு இணைத்து உருவாக்கப்பட்ட கட்டுரை ஒரு தனிக் கட்டுரையாகவே கணிக்கப்படும்.

## 6. ஆய்வுக் கட்டுரையை வரையும் போது கவனத்தில் எடுக்க வேண்டியவைகள்

சகல கட்டுரைத் தலைப்புக்களின் கீழும் மூன்று தகவல் மூலங்கள் தொடர்பாக விபரமாக எழுதுதல் வேண்டும். அம்மூலங்கள் தெரிவு செய்யப்பட்ட தலைப்புத் தொடர்பாக ஆழமான தகவல்களைக் கொண்டதாகக் காணப்படுமாயின் குறித்த தலைப்புடன் தொடர்பான பிரதான தகவல்களை மாத்திரம் விளக்கம் கொடுத்தல் வேண்டும். மூலத்தின் முக்கியத்துவம், குணாம்சங்கள், குறைபாடுகள் பற்றி விளக்குதல் வேண்டும். அதன் பின்னர் ஏனைய ஏழு தகவல் மூலங்கள் தொடர்பாக சுருக்கமான ஒரு விளக்கம் கொடுப்பது போதுமானது. ஒவ்வொரு தகவல் மூலத்தின் நூல்விபரத் தரவுகள் பொருத்தமான நியமத்திற்கேற்ப வழங்கப்படல் வேண்டும்.

**உண்மைத் தன்மை**

நீங்கள் முன்வைக்கும் தகவல்களின் உண்மைத் தன்மை தொடர்பாக கவனமாக இருத்தல் வேண்டும். வரலாற்று, இலக்கிய மற்றும் விஞ்ஞான ரீதியான கருத்துக்களை

திரிபுபடுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். தகவலைப் பெற்றுக் கொண்ட மூலம் பற்றிய தகவல்கள் முன்வைக்கப்படல் வேண்டும்.

**நேர்த்தி**

நீங்கள் விரும்பியதை வாசித்து, எழுதுவது என்றில்லாமல், கட்டுரையானது முறையாக வரையப்படல் வேண்டும். ஆய்வுக் கட்டுரையின் ஒவ்வொரு விடயங்களைப் பற்றியும் மாணவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். தமது கட்டுரையின் இலக்கண, இலக்கிய அமைப்புப் பற்றிக் கவனத்தில் எடுத்தல், கருத்துக்களை தர்க்க ரீதியாக முன்வைத்தல், சிதைவடையாத சீரான வசன நடையில் கருத்துக்களை முன்வைத்தல் என்பன முக்கியமாகும்.

**பூரணத்தன்மை**

விடயம் தொடர்பாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய சகல அடிப்படைத் தகவல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். ஆய்வின் நோக்கங்களுக்கமைய தேவையான சகல தகவல்களும் வழங்கப்படல் வேண்டும்.

**நடுநிலமை**

சகல தகவல்களும் நடுநிலமையாக முன்வைக்கப்படல் வேண்டும். எந்தவொரு நபருக்கோ, நிறுவனத்திற்கோ, இனத்திற்கோ, சமயத்திற்கோ, விழுமியங்களுக்கோ பங்கம் விளைவிக்குமுகமாக உமது கட்டுரையானது அமையக் கூடாது. அதேபோன்று இது ஒரு பிரசார ஊடகமாகவும் அமையக் கூடாது.

**தற்காலத்தைய தகவல்களைக் கொண்டிருத்தல்**

விடயம் தொடர்பான புதிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதற்காகக் குறித்த வெளியீட்டாளர்களின் புதிய வெளியீடுகள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

**சீரான தன்மை**

குறித்த ஒரு விடயம் தொடர்பாக வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு கருத்துக்கள் இடம்பெறுவதைத் தவிர்த்தல் வேண்டும். குறித்த ஒரு சொல் ஒரு இடத்தில் ஒன்றாகவும் இன்னொரு இடத்தில் இன்னொன்றாகவும் உபயோகிக்கப்படல் கூடாது. சுட்டியாக்கம் மற்றும் உசாத்துணைப் பட்டியல் போன்றவற்றைத் தயார் செய்யும் போது ஒரே தகவல் இரண்டு விதமாக அமையக் கூடாது. வெற்றிகரமான ஆய்வொன்றை வரையும் போது அதன் சீரான தன்மை முக்கியம் வாய்ந்ததாகும்.

**தெளிவு**

உமது கட்டுரையானது சொற்கூட்டங்களின் வடிவம் என்பதால், நீங்கள் வரையும் கட்டுரையானது இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும், தெளிவாகக் கருத்துக்களை வெளியிடக் கூடிய வகையிலும் இலகுவான வசன நடையைப் பின்பற்றி வரையப்படுவது முக்கியமானது.

**மொழி**

கட்டுரையானது ஒரு மொழியில் எழுதப்படல் வேண்டும். உங்களால் தெரிவு செய்யப்பட்ட வெளியீடுகளின் தலைப்புகள், நிறுவனங்களின் பெயர்கள் என்பன ஆங்கிலத்தில் இருப்பின் அவற்றை ஆங்கிலத்தில் குறிப்பிட்டு தமிழில் விளக்கம் தரல் வேண்டும்.

**கட்டுரையில் இருக்க வேண்டிய முக்கிய பகுதிகள்**

i. தலைப்புப்பக்கம்: இதில் கட்டுரைத்தலைப்பு, மாணவர் பெயர், பதிவு இலக்கம், இறுதிப் பரீட்சையின் சுட்டெண், கட்டுரையை ஒப்படைத்த வருடம், மாதம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். (இணைப்பு - 1)

ii. மாணவரின் உறுதியுரை தாங்கிய பக்கம்

iii. முன்னுரை

iv. உள்ளடக்கப் பக்கம்: கட்டுரைக்காக உள்ளடக்கப் பக்கமொன்று இருத்தல் வேண்டும் (இணைப்பு - 3). உமது கட்டுரையில் வரைபடங்கள், தேசப்படங்கள், புகைப்படங்கள், வரைபுகள் போன்றவை உள்ளடங்கியுள்ளதெனில் அவற்றிற்கென தனியான உள்ளடக்கப்பக்கம் உருவாக்கப்பவேண்டும். அது பிரதான உள்ளடக்கப் பக்கத்திற்கு அடுத்ததாக இருத்தல் வேண்டும்

v. கட்டுரைத் தலைப்புக்கள் பற்றிய பக்கம்: சகல கட்டுரைத் தலைப்புப் பக்கத்திலும் வலது பக்க கீழ் மூலையில், தலைப்பு, மாணவரின் பெயர் மற்றும் பதிவு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

vi. உசாத்துணை நூற்பட்டியல்: இது முதலாவது கட்டுரைக்கு மாத்திரம்வேண்டப்படுகிறது (இணைப்பு - 2).

* ஒவ்வொரு கட்டுரைகளிலும் தனித்தனியாக கட்டுரை எண்ணிட்டு கட்டுரைத் தலைப்புப் பக்கத்தில் குறிப்பிடப்படல் வேண்டும் (இணைப்பு - 4).

* மேற்படி முக்கிய பகுதிகள் யாவும் நூலின் வலதாக உள்ள பக்கங்களில் அமைய வேண்டும்.

**மொழிப்பிரயோகம்**

உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாகவன்றி அறிவு மற்றும் தகவலை வெளிப்படுத்துவனவாகக் கட்டுரையின் மொழிப் பிரயோகம் அமைதல் வேண்டும். மாணவர்கள் தகவல்களை விளங்கிக்கொண்டு தங்களது சொந்த மொழி நடையில் எழுதவேண்டும். சில கட்டுரைகளில் பலவாறான மொழிப் பிரயோகம் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் நூல்களில் இருந்து எடுத்த கருத்துக்களை பிரதிபண்ணல் கூடாது.

**திருத்தமான மொழிப் பாவனை**

மாணவர்கள் திருத்தமான மொழிப் பாவனையில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக சரியான எழுத்துக்களின் பிரயோகம், எழுவாய், பயனிலை தொடர்புகள், சொல்லிடைவெளி, நிறுத்தற்குறிகள் என்பவற்றில் கவனம் செலுத்தவேண்டும்.

## 7. கட்டுரைத் தலைப்புக்கள் தொடர்பான சுருக்க அறிமுகம்

### i. விடயம் தொடர்பான அறிமுகம்: நோக்கம், வளர்ச்சிப் போக்கு, முக்கியத்துவம் வரைவிலக்கணம் (Introduction to the Subject )

ஆய்வுக் கட்டுரையை வரையும் போது தலைப்புத் தொடர்பான இந்த அறிமுகக் கட்டுரை வரைவது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. ஏனைய கட்டுரையை வரைவதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட தகவல்கள் தொடர்பான அறிமுகம் முக்கியமானது. விடயம் தொடர்பான அடிப்படை உசாத்துணை நூல்கள், துறைசார்ந்தவர்களின் வெளியீடுகள் என்பவை பரிசீலிக்க வேண்டியிருப்பதுடன் விடயம் தொடர்பான வரைவிலக்கணமும் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும். விடயதானங்கள் உப தலைப்புக்களின் கீழ் முன்வைக்கப்படல் பொருத்தமானதாகும்.

விடயங்களை விளக்கும் போது தேவையேற்படின் மேற்கோள்கள், வரைபடங்கள், புகைப்படங்கள் போன்றவற்றை உள்ளடக்கலாம்.

**ii. நூல் விவரப் பட்டியல்கள் (Bibliographies)**

நீங்கள் தெரிவு செய்த தலைப்புக்குட்பட்டவகையில் காணப்படும் நூல்விவரப் பட்டியல்கள் தொடர்பாக கட்டுரையொன்று வரைவது இத்தலைப்பினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. நூல்விவரப்பட்டியல் என்பது கிரமமாக ஒழுங்கமைக்கப்பட்ட வெளியீடுகளின் பட்டியலாகும்.
நூல் விவரப்பட்டியல்கள் மூலம் குறித்ததொரு விடயம் தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்களின் விபரங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். தேசிய, சர்வதேச, சாதாரண விடயம் சார், வியாபார மற்றும் அச்சீடு போன்ற பலவித நூல் விவரப்பட்டியல் வகைகளில் உமது தலைப்பிற்கு உகந்ததான நூல் விவரப் பட்டியல்கள் பற்றிய தகவல்கள் உமது கட்டுரைக்கு பொருத்தமானதாக இருக்கும்.

**iii. பருவ வெளியீடுகள் (Periodicals)**

குறித்த ஒரு விடயத்துடன் தொடர்பான புதிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு உபயோகிக்கப்படுவது பருவ வெளியீடுகளாகும். நீங்கள் தெரிவு செய்த தலைப்புக்குப் பொருத்தமான உள்நாட்டு வெளிநாட்டு பருவ வெளியீடுகள் பற்றிய தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட வேண்டும்.

**iv. அகராதிகள், கலைச்சொல்லகராதிகள், கலைக் களஞ்சியங்கள்
(Dictionaries, Glossaries, Encyclopedias)**

**அகராதிகள் (Dictionaries)**

குறித்த ஒரு விடயம் தொடர்பான ஆய்வின் போது அகராதிகள் மிகவும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றன. அகராதியின் தொழிற்பாடானது மொழியொன்றின் சொல் தொடர்பான தகவல்களை வழங்குவதாகும். அதன் கருத்து, எழுதும் முறை தோற்றம் வளர்ச்சி மற்றும் பாவனை போன்ற தேவைப்பகின்ற அடிப்படைத் தகவல்களை அகராதிகள் வழங்குகின்றன. பரிபூரண அகராதியில் இவ்வகை அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும். சுருக்க அகராதியில் தெரிவு செய்யப்பட்ட சில தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருக்கும். நீங்கள் தெரிவு செய்த தலைப்புடன் தொடர்பான சொற்களுடைய அகராதி மற்றும் அவற்றின் விடயத்துடன் தொடர்பான முக்கிய சொற்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ள விதம் தொடர்பாக விளக்குவது இத்தலைப்பின் நோக்கமாகும்.

**கலைச்சொல்லகராதிகள் (Glossaries)**

நீங்கள் தெரிவு செய்த தலைப்புடன் தொடர்பான குறித்த ஒரு மொழிச் சொல் அல்லது சொற்றொடர் வேறொரு மொழியில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்னும் தகவல்களைக் குறித்துக் காட்டுவது இத்தலைப்பின் நோக்கமாகும். பல்வேறுப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல் தேடலின் போது கூட கலைச்சொல்லகராதியானது உபயோகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**கலைக்களஞ்சியங்கள் (Encyclopedias)**

கலைக் களஞ்சியமொன்றில் முழு உலக அறிவு தொடர்பான தகவல்களும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். உலக அறிவானது பல பிரிவுகளாக வகுக்கப்பட்டு குறித்த ஒவ்வொரு துறை தொடர்பாகவும் அத்துறை சார்ந்த அறிவு ஜீவிகளினால் வரையப்பட்ட கட்டுரைகள் அகரவரிசைப்படி இதில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். இதனைப் பரிசீலிப்பதன் மூலம் நீங்கள் தெரிவு செய்த தலைப்புத் தொடர்பான அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். குறித்த ஒரு தலைப்புத் தொடர்பான தகவல் தேடுகையை கலைக் களஞ்சியத்திலிருந்து ஆரம்பித்தல் பொருத்தமானதாகும்.

## v. விவரக் கொத்துக்கள், ஆண்டு நூல்கள் (Directories, Year Books)

### விவரக் கொத்துக்கள் (Directories)

நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களைச் சுருக்கமாகவோ அல்லது விரிவாகவோ வழங்குகின்ற ஒரு வெளியீடே விவரக் கொத்துக்களாகும். உமது தலைப்புக்குப் பொருத்தமான புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு விவரக் கொத்துக்கள் மிகவும் உபகாரமாக அமைகிறது.

### ஆண்டு நூல்கள் (Year Books)

குறித்த ஒரு விடயம் தொடர்பாக தற்காலத் தகவல்களைப் (உதாரணம்: வருடாந்த முன்னேற்றமும், மாறுதல்களும்) பெற்றுக் கொள்வதற்கு உபயோகிக்கப்படும் ஒரு வெளியீடாகும். அரசாங்க நிறுவனங்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றினால் வெளியிடப்படுகின்ற ஆண்டு நூலொன்றின் மூலம் அந்நிறுவனம் தொடர்பாக உமது தலைப்புக்கு ஏற்ற புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். குறித்த வருடத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள், நிறுவனத்தின் உறுப்பினர்கள் தொடர்பான முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக இது காணப்படுகின்றது.

## vi அமைப்புக்கள் : ஆய்வு மற்றும் அபிவிருத்தி, துறைசார் அமைப்புக்கள், நிறுவனங்கள் (Organizations : Research and Development, Professional Organizations and Institutions)

நீங்கள் தெரிவு செய்த விடயம் தொடர்பான துறையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மற்றும் அத்துறையில் அபிவிருத்தி தொடர்பாக ஈடுபடுகின்ற அரச, அரச சார்பற்ற, தேசிய, சர்வதேச ரீதியிலான நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவற்றின் முகவரி, ஆரம்பம், நோக்கம், நிறுவன ஒழுங்கு உறுப்புரிமை, செயற்றிட்டங்கள், சேவைகள், கல்வி மற்றும் பயிற்சி நெறிகள் மற்றும் வெளியீடுகள் என்பன தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

## vii சரிதைத் தகவல் மூலங்கள் (Biographical Information Resources)

நீங்கள் தெரிவு செய்த துறையின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை நல்கிய பிரபல நபர்கள் வாழ்ந்திருப்பர் அல்லது தற்போதும் வாழ்ந்து கொண்டிருப்பர். அவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளவதற்கு இந்த சரிதைத் தகவல் மூலங்கள் பயன்படும். இவற்றில் நபர்களின் பெயர்களை அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். இதன் கீழ் பெயர், பிறப்பு, இறப்பு, முகவரி, கல்வித் தகைமைகள், பதவி, சேவைகள், வெளியீடுகள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். நீங்கள் தெரிவு செய்த விடயத்துடன் தொடர்பான துறைக்கு பங்களிப்புச் செய்த நபர்கள் தொடர்பாக ஆய்வு செய்தல் இத்தலைப்பின் நோக்கமாகும்.

## viii பூகோள உசாத்துனைகள் : பூகோள தகவல் பட்டியல்கள், தேசப்படங்கள் மற்றும் பூகோள வரைபட நூல்கள் (Geographical Reference Sources : Gazetteer, Maps, Atlases)

### பூகோள தகவல் பட்டியல்கள் (Gazetteer)

நீங்கள் தெரிவு செய்திருப்பது பூகோளத்துடன் தொடர்பான துறையாயின், பூகோள தகவல் பட்டியல் தொடர்பாக எழுதுவதானது விடயம் தொடர்பாக கருத்துரை செய்வதன் முக்கிய பகுதியாகக் கணிக்கப்படுகிறது.

பூகோளத் தகவல் பட்டியலில் பிரதானமாக ஒரு நாட்டின் பூகோளவியல் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். அதே போல் பாதை வழிகாட்டி, போக்குவரத்து சேவை, வைத்தியசாலைகள், அஞ்சல் அலுவலகங்கள் போன்ற சேவை நிறுவனங்கள், வரலாற்று மற்றும் கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற இடங்கள் போன்றன தொடர்பாக

தகவல்கள் உள்ளடங்கியிருக்கும். இது உல்லாசப் பிரயாணிளுக்கும் மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

**தேசப்படம் மற்றும் தேசப்பட நூல் (Maps and Atlases)**

பூகோள, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் போன்ற தகவல்களை மையமாகக் கொண்டு வரையப்பட்ட தேசப்படங்கள் காணப்படுகின்றன. நீங்கள் தெரிவு செய்த விடயம் தொடர்பான தகவல்களை தேசப்படங்கள் மூலம் விளக்குவதற்கான தேவையேற்படின் அது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். தேசப்படங்களின் சேகரிப்பாக தேசப்பட நூல்கள் காணப்படுகின்றன.

**ix இலக்கிய மீளாய்வுகள் (Literature Reviews)**

குறித்த ஒரு காலப்பகுதிக்குட்பட்டவகையில், குறித்த ஒரு தலைப்பில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புக்கள் தொடர்பான இலக்கிய விமர்சனங்கள் மற்றும் இலக்கிய மீளாய்வுக் கட்டுரைகள் பருவ இதழ்களில் வெளிவருகின்றன. இவ்வெளியீடுள் குறித்த விடயம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட சுட்டிகளாகவோ, நூல்விவரப்பட்டியலாகவோ காணப்படலாம் அல்லது விடயத்தின் உள்ளடக்கத்தைப் பிரதிபலிக்கின்ற வெளியீடுகள் தொடர்பான தகவல்களையுடைய விமர்சன விவரணமாகவோ இருக்கலாம்.

**x தேசிய மற்றும் சர்வதேச தகவல் முறைமைகள் மற்றும் வலையமைப்புக்கள் (Information Systems and Networks - National and International)**

தற்காலத்தில் வேகமான அறிவு வளர்ச்சி காரணமாக பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான தகவல் முறைமைகள் மற்றும் வலையமைப்புகள் உருவாகியுள்ளன. குறித்தவொரு விடயம் சம்பந்தமாகத் தொடர்புபட்டுள்ள தகவல் முறைமைகள் அல்லது வலையமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நூலகத்தினது அல்லது தகவல் நிலையத்தினது வளங்கள் தொடர்பான தகவல்களை இத் தகவல் முறைமைகள் மற்றும் வலையமைப்பு மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு அதிகளவில் காணப்படுகின்றது. நீங்கள் தெரிவு செய்த தகவல் முறைமைகள் மற்றும் வலையமைப்பக்கள் என்பனவற்றின் ஆரம்பம், மத்திய நிலையம், தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள், வளங்கள் தொடர்பான தகவல்கள் இங்கு விளக்கப்பட வேண்டியுள்ளது.

**xi நூலக தகவல் மத்திய நிலையங்கள் (Library and Information Centres)**

நீங்கள் தெரிவு செய்த தலைப்புடன் தொடர்பான தகவல் வளங்களையுடைய நூலக தகவல் மத்திய நிலையங்கள் தொடர்பான கட்டுரையொன்று வரைவது இக்கட்டுரையின் நோக்கமாகும். அப்படிப்பட்ட நிறுவனங்களின் முகவரி (தொலைபேசி, தொலை நகல் இலக்கங்கள், மின்னஞ்சல் மற்றும் இணையத்தள முகவரி) தாய் நிறுவனம், ஆரம்பம், நோக்கம், உள்ளகக் கட்டமைப்பு, தொழிற்பாடு, சேவைகள், வளங்கள், தரவுத்தளங்கள், வலையமைப்புக்கள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**xii சுட்டியாக்கமும், சுருக்கக் குறிப்புப் பருவ இதழ்களும் (Indexings and Abstracting periodicals)**

நீங்கள் தெரிவு செய்த விடயங்களுடன் தொடர்பான சுருக்கத் தகவல்களை சுட்டியாக்கப் பருவ இதழ்களில் கண்டு கொள்ளலாம். சுருக்ககங்கள் மூலம் குறித்ததொரு விடயத்துடன் தொடர்பான கட்டுரையை நேரடியாக அணுக முடியும். ஆகவே சுருக்கக் குறிப்புப் பருவவெளியீடுகளினால் குறித்த விடயத்துடன் தொடர்பான முக்கிய பருவ வெளியீடுகளை அணுகுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவை இரண்டாம் நிலைத் தகவல் மூலகங்களாகக் கணிக்கத்தக்கன. இதன் மூலம் குறித்த விடயத்துடன் தொடர்பான பருவ வெளியீடுகளை நோக்கி நகர்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.

**xiii. விடயத்துடன் தொடர்பான விசேட பகுப்பாக்க முறைகள் (Special Classification Schemes)**

நீங்கள் தெரிவு செய்த விடயத்துடன் தொடர்பான சாதனங்களைப் பகுப்பாக்கம் செய்வதற்கான விசேட கவனம் செலுத்தி உருவாக்கப்பட்ட பகுப்பாக்க முறையொன்றை ஆய்வு செய்வது இதன் நோக்கமாகும்.

**xiv விடயத்துடன் தொடர்பான பட்டியலாக்கப் பிரச்சினைகள் (Cataloguing Problems regarding to subject)**

பட்டியலாக்கம் என்பதிலிருந்து கருதப்படுவது குறித்த ஒரு விடயம் தொடர்பான தகவல்களை வாசகர்களுக்கு வழங்குதல் அல்லது குறித்த விடயம் தொடர்பாக பிரவேசிப்பதற்கு ஏதுவான வழியை அமைத்துக் கொடுப்பதாகும். நீங்கள் தெரிவு செய்த விடயத்தைப் பற்றிய சாதனங்களைப் பட்டியலாக்கம் செய்கின்ற போது ஏற்படுகின்ற சிக்கல்களை மிகவும் விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**xv தரவுத்தளங்கள் (Databases)**

நீங்கள் தெரிவு செய்த விடயத்துடன் தொடர்பான நூலக விஞ்ஞான தரவுத்தளங்கள் பற்றிய தகவல்களை வழங்குவது இதன் நோக்கமாகும். இவை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் செயற்படுவதுடன், அவற்றை கணனி வலையமைப்புகள் ஊடாக உட்பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு கணனி வலையமைப்பு வசதியில்லாத நூலகங்களின் பிரயோசனம் கருதி இறுவெட்டுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் காணப்படுகின்றன.

## 8. பொதுவான அறிவுறுத்தல்கள்

ஆய்வுக்கட்டுரையொன்றை வரையும் போது உரிய விதிமுறைகளை பின்பற்றுவது முக்கியமானது. அதற்கான முக்கிய சில படிமுறைகள் கீழேதரப்பட்டுள்ளன.

**கடதாசியைத் தெரிவு செய்தல்**

ஆய்வுக் கட்டுரையை வரைவதற்கு A4 அளவுடையதான (210mm x 297mm), 70 GSM அல்லது 80 GSM தரத்திலான நிழல்ப்பிரதி எடுப்பதற்காக உபயோகிக்கப்படும் வெள்ளை நிறக் கடதாசியை உபயோகிக்க வேண்டும். ஏனைய நிறம் கொண்ட தரம் குறைந்த மெல்லிய கடதாசி உபயோகிப்பதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

**பிரதி தயாரித்தல்**

உரிய கடதாசியை தெரிவுசெய்தபின்னர், தெளிவாக தனிப் பக்கத்தில் தட்டச்சு செய்து அல்லது கணனிப் பக்கவடிவமைப்பிடப்பட்டு அச்சுருப் பெற்றுக் கொள்ளவேண்டும். தட்டச்சு செய்வதை விடுத்து கணனிப் பக்கவடிவமைப்பச் செய்வது மிகவும் வசதியாக இருக்கும் என்பதை கவனத்திற்க கொள்க.

**எழுத்தின் அளவு**

கட்டுரையின் எழுத்தின் அளவு 12 பொயின்ட் ஆக இருப்பதுடன் அடிக்குறிப்பின் அளவு பொயின்ட் 10 ஆக இருத்தல் வேண்டும். தலைப்பு மற்றும் உபதலைப்பு என்பனவற்றிற்காக முறையே 16 மற்றும் 14 எழுத்தளவை உபயோகிக்க வேண்டும்.

**எழுத்து வடிவம்**


பல தரப்பட்ட எழுத்து வடிவங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்பற்றி வாக்கியம் மற்றும் எழுத்தமைப்பு அமைதல் வேண்டும். கணனி எழுத்துக் கோர்ப்பு முறையின் கீழ் செய்வதாயின் தெளிவான ஒரு எழுத்து வடிவைத் தெரிவு செய்தல் வேண்டும்.

**காகித விளிம்பு அளவு**

இடது பக்கத்தில் 40 மில்லி மீற்றரும், வலது பக்கத்தில் 20 மில்லி மீற்றரும், மேற்பகுதியில் 30 மில்லி மீற்றரும், கீழ்ப்பகுதியில் 20 மில்லி மீற்றர் என்ற அளவில் காகித விளிம்பு (Page Margin) வழங்கப்பட்டிருக்க வேண்டும். (படம் 1)

**வரி இடைவெளி**

வரிகளுக்கிடையில் இடைவெளி 1.5 மி.மீ. அல்லது 2.0 மி.மீ. ஆகக் காணப்படல் வேண்டும். (படம் - 1)




படம் - 1

**பக்க இலக்கமிடல்**

தெளிவாகப் பக்க இலக்கமிடல் வேண்டும். அதற்காகப் பல முறைகள் காணப்படுகின்றன. ஒரே முறையை ஆய்வுக்கட்டுரை பூராகவும் பின்பற்றுவது முக்கியமானது. பக்கத்தின் மேல் மத்தியிலோ அல்லது கீழ்மத்தியிலோ பக்க இலக்கமிடுவது சிறந்தது. ஆய்வுக் கட்டுரையின் தலைப்புப் பக்கம் தவிர்ந்த முன்னோடிப் பக்கங்களை உரோமன் இலக்கங்களாலும், ஆய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையான சகல பக்கங்களையும் இந்து-அராபிய இலக்கங்களாலும் பக்கமிடப்படல் வேண்டும்.

**புகைப்படங்கள், சித்திரங்கள், தேசப்படங்கள் மற்றும் வரைபுகள் இணைத்தல்**

விடயத்துடன் தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் விடயங்களை உறுதிப்படுத்தும் வகையில் புகைப்படங்கள், சித்திரங்கள், தேசப்படங்கள் மற்றும் வரைபுகள் என்பனபவற்றை மாத்திரமே இணைத்தல் வேண்டும். அவற்றைத் தொடராக எண்ணிட்டு தலைப்பிடுதல் வேண்டும். இவற்றைக் கொண்ட உள்ளடக்கப் பக்கமொன்றை இணைத்தல் வேண்டும்.

**கட்டுதல் (Binding)**

ஆய்வுக் கட்டுரையை பொருத்தமான வகையில் கட்டுதல் வேண்டும். நீங்கள் வரையும் கட்டுரைகள் ஆறையும் ஒன்றாக இணைத்துக் கட்டுதல் வேண்டும்.

**ஆய்வுக் கட்டுரையை ஒப்படைத்தல்**

ஒப்படைக்க வேண்டிய பிரதி ஒன்றாகும் (01). தேர்வு நாடியின் உறுதியுரை (படம் - 2) யுடன் கட்டுரை நூலக சங்க காரியாலயத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். கட்டுரையைப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம். கட்டுரைகள் பெற்றுக் கொண்டதை குறித்து வைத்துக் கொள்ளும் ஒரு குறிப்பேடு நூலக சங்கத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கட்டுரையை ஒப்படைத்தன் பின்னர் ஆய்வுக் கட்டுரை தொடர்பான மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பரீட்சகர் நாடினால் அதற்காக நூலக சங்கத்தின் கல்வி அதிகாரி மூலம் தேர்வு நாடி அழைக்கப்படலாம்.

> **தேர்வு நாடியின் உறுதியுரை**
>
> இவ்வாய்வுக் கட்டுரையானது எனது சொந்தமுயற்சியின் பேரில் வரையப்பட்டது என்பதைஉறுதிசெய்கிறேன்.
>
> தேர்வு நாடியின் ஒப்பம் :
> திகதி :

படம் - 2

## 9. மதிப்பீடு செய்தல்

ஆய்வுக் கட்டுரையை மதிப்பீடு செய்வதற்காகத் துறை சார் நூலகர் ஒருவருக்குக் கொடுக்கப்படும். கட்டுரையானது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருத்தங்களுக்குட்படின் முறையே முழு ஆய்வுக் கட்டுரையுமோ அல்லது பகுதியளவிலோ திருத்தப்பட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

கட்டுரை பூரணப்படுத்தப்பட்ட திகதி நிர்ணயிக்கப்படுவது திருத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டதன் பின்னராகும். இதன்போது திருத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரை அல்லது அதன் ஒரு பகுதி கடைசியாக ஒப்படைக்கப்பட்ட திகதியே சித்தியெய்திய திகதியாகக் கணிக்கப்படும்.

குறித்த மாணவர் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள நிலையில், ஆய்வுக் கட்டுரையின் பெறுபேறுகளும் பெறப்பட்டதன் பின்னரே முழுமையாக இறுதிப் பரீட்சையைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படும்.

## 10. பின்னிணைப்புகள்

**இணைப்பு 1 : தலைப்புப்பக்க மாதிரி**

**இலங்கையின் உல்லாசப் பயணத்துறை**

நிமாஷ ஹங்ஸிகா தெல்தெனிய
L. 207
2001

இலங்கை நூலக சங்கத்தின் நூலக மற்றும் தகவல்
விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியின் மட்டம் 3 பகுதி ii பரீட்சையின் தேவையின் நிமித்தம்
தயாரிக்கப்பட்ட
ஆய்வுக் கட்டுரையாகும்

2000 ஆகஸ்ட்

## இணைப்பு 2 : உசாத்துணைப் பட்டியல் தயாரித்தலுக்கான வழிகாட்டி

நீங்கள் ஆய்வுக்குட்படுத்திய சகல தகவல் மூலகங்கள் பற்றியதுமான தகவல்களை உசாத்துணைப் பட்டியல்கள் என்ற வகையில் அகர வரிசைப்படுத்தப்படல் வேண்டும். அதற்காக ஒரே சீரான மாதிரி பின்பற்றபடல் வேண்டும். தேர்வு நாடியின் கவனத்திற்காக சில பதிவுகளின் உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தனி ஆசிரியத்துவ நூல்

    ஜெயராசா, சபா. **உலகக் கல்வி வரலாறு,**
    கொழும்பு, சேமமடு பதிப்பகம், 2010.

2. இரு ஆசிரியத்துவ நூல்

குகதாஸன், கே. எஸ். சக பொன்னம்பலம், கே. **தாவரவியல்,** யாழ்ப்பாணம், செட்டியார் அச்சகம்,1983.

3. மூன்று ஆசிரியத்துவ நூல்

அனஸ், எம். எஸ். எம்., அமீர்தீன், வீ. சக வஸீல், ஏ. ஜே. ஏ. **இலங்கை இனக் கலவரங்களும் முஸ்லிம்களும்,** பேராதனை: 2009

4. மூன்று ஆசிரியருக்கு மேற்பட்ட நூல்

நஸ்ருல்லாஹ், ஏ. ... ஏனையோர், **உதயக் குமுரல் : புதுக் கவிதைத் தொகுதி,** கிண்ணியா, யூ. கே. கலை இலக்கியக் குழு, 1994.

5. அநாமதேய ஆசிரியத்துவ நூல்

**இலங்கைத் திருச்சபை ஒரு வரலாறு 1945-1995.** தொகுப்பு பிரெட்றிக் மெடிஸ், கொழும்பு : கொழும்பு மறை மாவட்டம், 1995.

6. சஞ்சிகைக் கட்டுரையொன்று

கமால்தீன், எஸ். எம். **நாட்டின் அபிவிருத்தியில் நூலக தகவல் விஞ்ஞானம்,** நூலகச் செய்தி, 21(2), 2000. ப. 20-23.

7. புதினப் பத்திரிகைக் கட்டுரையொன்று

சந்திரசேகரன், சோ. **விழுமிய மையக் கல்வியின் முக்கியத்துவம்,** வீரகேசரி 1993. ஆனி 7. ப. 2.

8. கட்டுரைச் சேகரிப்பு

**இலங்கை நாட்டைக் கட்டியெழுப்புதல்,** தொகுப்பாசிரியர் ஞானா முனசிங்க. கொழும்பு : சிரமய, 1994. ப.1.

9. கட்டுரைத் தொகுதியொன்றிலிருந்து ஒரு கட்டுரை
சுக்ரி, எம். ஏ. எம். வரலாற்றுப் பாரம்பரியம். **மாத்தறை மாவட்ட முஸ்லிம்கள் : வரலாறும் பாரம்பரியமும்.** பதிப்பாசிரியர் எம். எம். எம். மஹ்ரூப். கொழும்பு : முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1995. ப. 27 - 39.

10. நிறுவன ஆண்டறிக்கை

இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம். **ஆண்டறிக்கை 1992.** கொழும்பு : இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், 1994.

11. ஆணைக்குழு அறிக்கை

இலங்கை. தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு, **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்கீழான தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக் குழுவின் அறிக்கை,** கொழும்பு:அரசாங்கவெளியீட்டலுவலகம்,1981.

12. சட்டம்

**இலங்கை. 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை நூலகக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்.** கொழும்பு : அரசாங்க வெளியீட்டலுவலகம், 1974.

13. மாநாட்டறிக்கை

**புதுமை இலக்கியம் : இலக்கியப் பேரரங்கு.** கொழும்பு, 5 -7, ஜூலை 1996. கொழும்பு : இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 1996.

14. வெளியிடப்படாத ஆய்வறிக்கை

வேலுதாசன், விமலராணி. **ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் சமூகப் பெறுமாணங்கள், (1970 - 1990),** முது கலை மானிப்பட்ட ஆய்வறிக்கை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1997. (வெளியிடப்படாத முது தத்துவமானி ஆய்வறிக்கை)

# நூலின் வெளியீட்டாண்டானது இங்கு தரப்பட்டுள்ளவாறு இறுதியிலோ அல்லது ஆசிரிய குறிப்பிற்குப் பின்னரோ வழங்கப்படலாம்.

உதாரணம் :

ஜெயராசா, சபா. **உலகக் கல்வி வரலாறு,**
கொழும்பு, சேமமடு பதிப்பகம், 2010.

அல்லது

ஜெயராசா, சபா. (2010) **உலகக் கல்வி வரலாறு,**
கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

இதில் ஏதோ ஒரு முறையைப் பின்பற்றுவதே முக்கியமானது

**இணைப்பு 3**

உள்ளடக்கம்


தேர்வுநாடியின் உறுதியுரை iii

உள்ளடக்கம் vi

கட்டுரை இல. 1

கட்டுரை இல. 2
விடயத் தலைப்பு தொடர்பான அறிமுகம் 1

கட்டுரை இல. 3
பருவ வெளியீடுகள் 25

கட்டுரை இல. 4
ஒழுங்கமைப்புக்கள் 75

கட்டுரை இல. 5
பூகோளத்தகவல் உசாவு மூலங்கள் 100

கட்டுரை இல. 6
நூலக தகவல் மத்திய நிலையங்கள் 125

கட்டுரை இல. 7
தரவுத்தளங்கள் 150

உசாவுப்பட்டியல் 180

**இணைப்பு 4**

இலங்கையின் உல்லாசப் பயணத்துறை

கட்டுரை இல. 2

அகராதிகள், கலைச்சொல்லகராதிகள், கலைக்கலஞ்சியங்கள்

நிமாஷ ஹங்ஸிகா தெல்தெனிய